செ.வெ.எண் : 15/ மே நாள் : 18.05.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கொரோனா பாதுகாப்பு மையங்களில்**

**கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு**

இராமநாதபுரத்தில் உள்ள கொரோனா பாதுகாப்பு மையங்களில் இன்று (18.05.2021) கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 2392 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 1483 பேர் அவர்களது சொந்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 82,851 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுபவர்களுக்கு சிகிச்சை வழங்கிட ஏதுவாக இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை உட்பட அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1500 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 4 தனியார் மருத்துவமனைகளில் 200 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், இராமநாதபுரம் சேதுபதி அரசு கலைக் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரி, பரமக்குடி அழகப்பா கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி ஆகிய 4 இடங்களில் கொரோனா பாதுகாப்பு மையங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் மொத்தம் 524 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சிகிச்சைக்கு தேவையான ஆக்சிஜன் உட்பட உயிர் காக்கும் மருந்துகள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இராமநாதபுரம் அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரி மற்றும் சேதுபதி அரசு கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் உள்ள கொரோனா பாதுகாப்பு மையங்களில் கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். இதில் சேதுபதி அரசு கலைக்கல்லூரியில் 150 படுக்கைகள் உள்ளன. தற்போது 45 நபர்கள் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மையத்தில் கொரோனா சிகிச்சை பெற்று வரும் நபர்களிடத்தில் கலந்துரையாடி அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சை மற்றும் உணவு குறித்து கேட்டறிந்தார். மேலும், அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரியில் 150 படுக்கைகள் உள்ளன. இதில் நோயாளிகள் யாரும் தங்க வைக்கப்படவில்லை.

பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்படும் பொதுமக்கள், சிகிச்சை பணியில் ஈடுபடும் மருத்துவர்கள், பணியாளர்கள் மற்றும் சிகிச்சை பெறுவோருக்கு தேவையான சத்தான உணவு, சுத்தமான குடிநீர் வசதி, கபசுரக் குடிநீர் முறையே வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் என கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, வட்டார வளர்ச்சி அலுவலர் உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**